உ

ஓம் ஸ்ரீ குமாராய நம:



# ॥ श्री सुब्रह्मण्य मङ्गलाष्टकम् ॥

# ஸ்ரீ ஸுப்ரம்மண்ய மங்களாஷ்டகம்

தமிழ் உரை: வாசஸ்பதி

शिवयोस्तनुजायास्तु श्रितमन्दार शाखिने ।
शिखिवर्यतुरङ्गाय सुब्रह्मण्याय मङ्गळम् ॥ १ ॥

சிவயோஸ்தனுஜாயாஸ்து
ச்ரிதமந்தாரசாகினே ।
சிகிவர்ய துரங்காய
ஸுப்ரம்மண்யாய மங்களம் ॥ 1 ॥

1. ஸ்ரீ பார்வதீ — பரமேச்வரர்களின் புத்திரரும், தம்மை அண்டினவர்களுக்குக் கற்பக மரமாக இருப்பவரும், சிறப்பு மிக்க மயிலைத் தனக்கு வாஹனமாக உடையவருமான ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளுக்கு மங்களம் உண்டாகட்டும்.

भक्ताभीष्टप्रदायास्तु भवरोग विनाशिने ।
राजराजादि वन्द्याय रणधीराय मङ्गलम् ॥ २ ॥

பக்தாபீஷ்டப்ரதாயாஸ்து
பவரோகவிநாசிநே
ராஜராஜாதி வந்த்யாய
ரணதீராய மங்களம் ॥ 2 ॥

2. பக்தர்களுக்கு விரும்பியதைக் கொடுப்பவரும், பிறவி என்னும் பிணியை அழிப்பவரும், அரசர்களுக்கெல்லாம் அரசராலும் வணங்கப்படுபவரும், யுத்தத்தில் வீர புருஷருமான ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளுக்கு மங்களம் உண்டாகட்டும்.

शूरपद्मादि दैतेय तमिस्रकुल भानवे ।
तारकासुर कालाय बालकायास्तु मङ्गलम् ॥ ३ ॥

சூரபத்மாதி தைதேய
தமிஸ்ரகுல பாநவே
தாரகாஸுரகாலாய
பாலகாயாஸ்து மங்களம் ॥ 3 ॥

3. சூரபத்மன் முதலிய அசுரக் கூட்டங்களாகிற இருளைப் போக்கும் சூரியனாக உண்டானவரும், தாரகன் என்ற அசுரனின் உயிரைக்கவர இயமனாக ஆனவரும், குமாரருமான ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளுக்கு மங்களம் உண்டாகட்டும்.

वल्ली वदनराजीव मधुपाय महात्मने ।
उल्लसन्मणिकोटीर भासुरायास्तु मङ्गलम् ॥ ४ ॥

வல்லீவதனராஜீவ
மதுபாய மஹாத்மநே ।
உல்லஸன்மணி கோடீர
பாஸுராயாஸ்து மங்களம் ॥ 4 ॥

4. வள்ளிதேவியின் முகமாகிற தாமரையில் தேனினை உண்ணும் வண்டு போலிருப்பவரும், ஒளியுடன் கூடிய மணிகளால் இழைக்கப்பட்ட கிரீடத்தினால் பிரகாசிக்கின்ற ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளுக்கு மங்களம் உண்டாகட்டும்.

कन्दर्पकोटि लावण्य निधये कामदायिने ।
कुलिशायुधहस्ताय कुमारायास्तु मङ्गलम् ॥ ५ ॥

கந்தர்ப்பகோடி லாவண்ய
நிதயே காமதாயிநே ।
குலிசாயுத ஹஸ்தாய
குமாராயாஸ்து மங்களம் ॥ 5 ॥

5. கோடிக்கணக்கான மன்மதர்களுடைய அழகினை யுடையவரும், பக்தர்களின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்பவரும், குலிசம் என்னும் ஆயுதத்தைக் கையில் கொண்டவருமான குமரக் கடவுளுக்கு மங்களம் உண்டாகட்டும்.

मुक्ताहार लसत्कण्ठ राजये मुक्तिदायिने ।
देवसेना समेताय दैवतायास्तु मङ्गलम् ॥ ६ ॥

முக்தாஹார லஸத்கண்ட
ராஜயே முக்திதாயிநே ।
தேவஸேநா ஸமேதாய
தைவதாயாஸ்து மங்களம் ॥ 6 ॥

6. முத்து மாலைகளால் பிரகாசிக்கின்ற கழுத்துக்களை உடையவரும், மோக்ஷத்தை அருளுபவரும், தெய்வயானை பிராட்டியுடன் உடன் வசிக்கின்ற தெய்வமுமான ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளுக்கு மங்களம் உண்டாகட்டும்.

कनकाम्बर संशोभिकटये कलिहारिणे ।
कमलापति वन्द्याय कार्तिकेयाय मङ्गलम् ॥ ७ ॥

கநகாம்பர ஸம்சோபி
கடயே கலிஹாரிணே ।
கமலாபதி வந்த்யாய
கார்த்திகேயாய மங்களம் ॥ 7 ॥

7. பொன் ஆடையினால் நன்றாக அழகுடன் விளங்குகின்ற இடுப்பினையுடையவரும், கலியுகத்தில் ஏற்படுகின்ற துன்பத்தை அகற்றுபவரும், லக்ஷ்மி தேவியின் கணவரான ஸ்ரீ மஹாவிஷ்ணுவால் நமஸ்கரிக்கப்படுபவருமான கார்த்திகேயருக்கு மங்களம் உண்டாகட்டும்.

शरकानन जाताय शूराय शुभदायिने ।
शीतभानु समास्याय शरण्यायास्तु मङ्गलम् ॥ ८ ॥

சரகானன ஜாதாய சூராய
சுபதாயினே ।
சீதபானு ஸமாஸ்யாய
சரண்யாயாஸ்து மங்களம் ॥ 8 ॥

8. நாணல் புல் நிறைந்த காட்டில் தோன்றினவரும், சூரரும், சுபத்தைச் செய்பவரும், சந்திரனுக்கு ஒப்பான அழகிய முகத்தை உடையவரும், அடைக்கலம் புகுந்தவரைக் காப்பவருமான சரவணபவனுக்கு மங்களம் உண்டாகட்டும்.

मङ्गलाष्टकमेतद्ये महासेनस्य मानवाः ।
पठन्ति प्रत्यहं भक्त्या प्राप्नुयुस्ते परांश्रियम् ॥ ९ ॥

மங்களாஷ்டகமேதத் யே
மஹாஸேனஸ்ய மாநவா: ।
படந்தி ப்ரத்யஹம் பக்த்யா
ப்ராப்னுயுஸ்தே பராம் ச்ரியம் ॥ 9

9. தேவர்களாகிய சைன்யத்திற்குத் தலைவனாகிய முருகனுடைய இந்த மங்களாஷ்டகத்தை எந்த மனிதர்கள் பிரதி தினமும், பக்தியுடன் படிக்கிறார்களோ அவர்கள் மேலான செல்வத்தை அடைவார்கள்.

ஸ்ரீ சுப்பிரமணிய மங்களாஷ்டகம்
தமிழ் உரையுடன் முற்றிற்று.
சிவம்

*With Compliments From :*

**BRIGHT SPRINGS INDUSTRIES**

*Manufacturers of :*

Coil Springs, Flat Springs, Spring washers, Circlips & Sheet Metal Components, Plastic Components

***No. 60, Ponniyamman Koil Street, ALANDUR, MADRAS-600 016.***

PHONE 432886